பிரசார் பாரதி
அகில இந்திய வானொலி, சென்னை-4

29 05 2024 — 6 45
புதன்கிழமை — காலை

<u>தலைப்புச் செய்திகள்-</u>

1. மக்களவைத் தேர்தலில் ஏழாவது கட்ட வாக்குப்பதிவுக்கான பிரச்சாரம் நாளை முடிவடைவதையொட்டி அரசியல் கட்சிகளின் தலைவர்கள் இறுதிக்கட்ட வாக்கு சேகரிப்பில் ஈடுபட்டுள்ளனர்.
2. நாடாளுமன்றத்திலும், சட்டமன்றங்களிலும் அடுத்த ஐந்து ஆண்டுகளில் 33 சதவீதம் பெண்கள் இருப்பதை பிஜேபி உறுதி செய்யும் என்று அக்கட்சியின் மூத்த தலைவர் திரு ராஜ்நாத்சிங் கூறியுள்ளார்.
3. பணவீக்கத்தை குறைக்கவும், வேலைவாய்ப்பை அதிகரிக்கவும் பிஜேபி தவறிவிட்டதாக காங்கிரஸ் பொதுச்செயலாளர் திருமதி பிரியங்கா காந்தி குற்றம்சாட்டியுள்ளார்.
4. செயற்கை நுண்ணறிவு தொழில்நுட்பத்தை கூகுலுடன் இணைந்து நடைமுறைக்குக் கொண்டுவர வேண்டியதன் அவசியத்தை இந்தியா வலியுறுத்தியுள்ளது.
5. உலக தடகள போட்டியின் நீளம் தாண்டுதலில் இந்தியாவின் ஷைலி சிங் வெண்கலப்பதக்கம் வென்றுள்ளார்.

<u>*---- இனி விரிவான செய்திகள் ---*</u>

**[]<<<>>>[]**

மக்களவைத் தேர்தலில் ஏழாவது மற்றும் இறுதிக்கட்ட வாக்குப்பதிவுக்கான பிரச்சாரம் நாளையுடன் நிறைவடைகிறது.

ஏழு மாநிலங்கள் மற்றும் ஒரு யூனியன் பிரதேசத்தைச் சேர்ந்த 57 தொகுதிகளில் வரும் சனிக்கிழமை இறுதிகட்ட வாக்குப்பதிவு நடைபெறவுள்ளது.

பிரச்சாரம். நிறைவடைய இன்னும் ஒரு நாள் மட்டுமே எஞ்சியுள்ள நிலையில், அரசியல் கட்சித்தலைவர்களும், வேட்பாளர்களும் இறுதிக்கட்ட வாக்கு சேகரிப்பில் முழுவீச்சில் ஈடுபட்டுள்ளனர்.

பிஜேபி மூத்த தலைவரும், பிரதமருமான திரு நரேந்திரமோடி நேற்று கொல்கத்தாவில் நடைபெற்ற மாபெரும் சாலை பேரணியில் கலந்து கொண்டார்.

இரண்டரை கிலோமீட்டர் தூரத்திற்கு இந்த பேரணி நடைபெற்றது.

இதில் மேற்குவங்க மாநிலத்தின் பிஜேபி தலைவர் சுகந்தா மஜூந்தர் உள்ளிட்ட பலரும் கலந்து கொண்டனர்.

பஞ்சாப் மாநிலம் மொகாலியில் நடைபெற்ற தேர்தல் பொதுக்கூட்டத்தில் உரையாற்றிய பிஜேபி மூத்த தலைவர் திரு ராஜ்நாத்சிங், அடுத்த ஐந்து ஆண்டுகளில் நாடாளுமன்றத்திலும், சட்டமன்றங்களிலும் 33 சதவீத பெண்கள் இருப்பதை தமது கட்சி உறுதி செய்யும் என்று கூறினார்.

ஜம்மு-கஷ்மீருக்கு தனி அந்தஸ்து வழங்கிய அரசியல் சட்டப்பிரிவை நீக்கியது, அயோத்தியில் ராமர் கோவில் கட்டியது உள்ளிட்ட தேர்தல் வாக்குறுதிகளை தாங்கள் நிறைவேற்றி இருப்பதாகத் தெரிவித்தார்.

அடுத்த மூன்று ஆண்டுகளில் உலகின் மிகப்பெரிய மூன்று பொருளாதார நாடுகளில் ஒன்றாக இந்தியாவை கொண்டு வருவதற்கான அனைத்து முயற்சிகளும் மேற்கொள்ளப்படும் என்று தெரிவித்தார்.

சந்திரயான் மூன்று பயணத் திட்டத்தில் இந்தியாவின் லேண்டரை பத்திரமாக நிலவில் தரையிறக்கி இந்தியா படைத்த சாதனையை உலக நாடுகள் பாராட்டி உள்ளதாக திரு ராஜ்நாத்சிங் கூறினார்.

**[]<<<>>>[]**

இமாச்சல பிரதேச மாநிலம் உனா மாவட்டத்தில் தேர்தல் பிரச்சாரம் மேற்கொண்ட காங்கிரஸ் பொதுச்செயலாளர் திருமதி பிரியங்கா காந்தி, கடந்த பத்து ஆண்டுகளில் பிஜேபி தலைமையிலான தேசிய ஜனநாயகக் கூட்டணி அரசு, பணவீக்கத்தை குறைக்கவும், வேலைவாய்ப்புகளை உருவாக்கவும் தவறிவிட்டதாகக் குற்றம்சாட்டினார்.

இமாச்சல பிரதேசத்தில் கடந்த ஆண்டு பெருமழையால் ஏற்பட்ட பாதிப்பை தேசிய பேரிடராக பிஜேபி அரசு அறிவிக்கவில்லை என்று திருமதி பிரியங்கா காந்தி கூறினார்.

மக்களவைக்கான தேர்தல் கடந்த மாதம் 19-ஆம் தேதி தொடங்கி, ஏழு கட்டங்களாக நடைபெற்று வருகின்றன.

இதுவரை ஆறு கட்டத்தேர்தல்கள் முடிவடைந்துள்ளன.

இதற்கிடையே அடுத்த மாதம் 4-ஆம் தேதி நடைபெறவுள்ள வாக்கு எண்ணிக்கைக்கான முன்னேற்பாட்டு பணிகள் குறித்து, தேர்தல் ஆணையம் ஆலோசனை மேற்கொண்டுள்ளது.

வாக்கு எண்ணிக்கையின் போது பின்பற்ற வேண்டிய நடைமுறைகள், கண்காணிப்பு கேமராக்களை பொருத்துவது, வாக்கு எண்ணும் மையங்களின் பாதுகாப்பு ஏற்பாடுகள் உள்ளிட்ட பல்வேறு அம்சங்கள் குறித்து இதில் விவாதிக்கப்பட்டது.

இந்நிலையில் மாநிலங்களின் தலைமை தேர்தல் அதிகாரிகள் வாக்கு எண்ணிக்கை தொடர்பான பணிகளை துரிதப்படுத்தி வருகின்றனர்.

மாவட்ட தேர்தல் அதிகாரிகளும் அந்தந்த தொகுதிகளில் போட்டியிட்ட வேட்பாளர்களின் பிரதிநிதிகள் முன்னிலையில் வாக்கு எண்ணும் மையங்களை ஆய்வு மேற்கொண்டு வருகின்றனர்.

வாக்கு எண்ணும் பணியில் ஈடுபடும் அலுவலர்களுக்கு பயிற்சிகளும் வழங்கப்பட்டு வருகின்றன.

**[]<<<>>>[]**

மக்களவைத் தேர்தலில் கடந்த ஆறாவது கட்டமாக 58 தொகுதிகளுக்கு நடைபெற்ற வாக்குப்பதிவில் 63 புள்ளி மூன்று ஏழு சதவீத வாக்குகள் பதிவாகியுள்ளதாக தேர்தல் ஆணையம் தெரிவித்துள்ளது.

ஏழு கோடியே ஐந்து லட்சத்து 44 ஆயிரத்து தொள்ளாயிரத்து 33 பேர் தங்களது வாக்குரிமையை செலுத்தி இருப்பதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

தபால் வாக்குகளும் எண்ணப்பட்ட பிறகு இறுதி வாக்கு சதவீதம் தெரியவரும் என்றும் தேர்தல் ஆணையம் கூறியுள்ளது.

ஏழாவது கட்ட தேர்தலில் மக்களவைத் தொகுதி வாரியாக வாக்காளர் பட்டியலையும் தேர்தல் ஆணையம் வெளியிட்டுள்ளது.

**[]<<<>>>[]**

பிரதமர் திரு நரேந்திரமோடி நாளை கன்னியாகுமரி வருவதையொட்டி அங்கு பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டுள்ளது.

நாளை முதல் மூன்று நாட்கள் கன்னியாகுமரி கடலில் அமைந்துள்ள விவேகானந்தர் நினைவு மண்டபத்தில் தியானத்தில் ஈடுபடப்போவதாக பிரதமர் அலுவலகம் தெரிவித்துள்ளது.

இதையொட்டி இந்திய ராணுவத்தின் ஹெலிகாப்டர் ஒத்திகை நிகழ்ச்சி கன்னியாகுமரி விருந்தினர் மாளிகை ஹெலிகாப்டர் தளத்தில் நடைபெற்றதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

**[]<<<>>>[]**

தமிழகத்தில் பொது விநியோக திட்ட குடும்ப அட்டைதாரர்கள் இம்மாதத்திற்கான பாமாயில் மற்றும் துவரம் பருப்பை அடுத்த மாதம் முதல் வாரம் வரை பெற்றுக் கொள்ளலாம் என மாநில உணவுப்பொருள் வழங்கல் துறை தெரிவித்துள்ளது.

குடும்ப அட்டைதாரர்களின் நலனை கருத்தில் கொண்டு இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக மாநில அரசின் செய்திக்குறிப்பு தெரிவிக்கிறது.

குடும்ப அட்டைகளுக்கான இம்மாத ஒதுக்கீட்டிற்கான அனைத்து பொருட்களும் மாத இறுதிக்குள் கிடைப்பதற்கான அனைத்து நடவடிக்கைகளும் எடுக்கப்பட்டுள்ளதாகவும் அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

**[]<<<>>>[]**

தமிழகத்தில் மேல்நிலை முதலாம் ஆண்டு பொதுத்தேர்வு விடைத்தாள் நகல்கோரி விண்ணப்பித்த மாணவர்கள் அதனை **dge.tn.gov.in** என்ற இணையதளத்திலிருந்து பதிவிறக்கம் செய்து கொள்ளலாம் என்று அரசு தேர்வுகள் இயக்ககம் தெரிவித்துள்ளது.

இந்த இணையதளத்தில் நோட்டிபிகேஷன் பகுதியில் இதனை கிளிக் செய்து பதிவிறக்கம் செய்யது கொள்ளலாம் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

மறுகூட்டல் மற்றும் மறுமதிப்பீட்டிற்கு விண்ணப்பிக்க விரும்பினால் இதே இணையதளத்தில் விண்ணப்பத்தை பதிவிறக்கம் செய்து பயன்படுத்திக் கொள்ளலாம்.

பூர்த்தி செய்த படிவங்களை இம்மாதம் 31-ஆம் தேதிமுதல் அடுத்த மாதம் நான்காம் தேதிவரை சம்பந்தப்பட்ட மாவட்ட அரசு தேர்வுகள் உதவி இயக்குநர் அலுவலகத்தில் இதற்கான கட்டணத்தை செலுத்த வேண்டும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

[]<<<>>>[]

செயற்கை நுண்ணறிவு தொழில்நுட்பத்தை கூகுலுடன் இணைந்து பயன்பாட்டிற்கு கொண்டு வருவதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டுமென்று இந்தியா உலக நாடுகளை கேட்டுக் கொண்டுள்ளது.

ஜெனிவாவில் நடைபெற்று வரும் 77-வது உலக சுகாதார மாநாட்டில் உரையாற்றிய மத்திய சுகாதாரத்துறை செயலர் திரு அபூர்வ சந்திரா, இதனைத் தெரிவித்தார்.

கூகுல் நிறுவனத்தின் சுகாதாரப் பிரிவுக்கான அதிகாரி டாக்டர் கரண் டி சால்வோ-வையும் சந்தித்து இதற்கான வாய்ப்புகள் குறித்து அவர் ஆலோசனை நடத்தினார்.

இந்தியாவில் டிஜிட்டல் கட்டமைப்பை சுகாதாரத்துறை ஆக்கப்பூர்வமாக பயன்படுத்தி வருகிறது என்றும் அவர் கூறினார்.

ஆயூஷ்மான் பாரத் மருத்துவக் காப்பீட்டுத் திட்டம் உள்ளிட்டவை மின்னணு கட்டமைப்பில் கொண்டு வருவதற்கான நடவடிக்கைகளும் எடுக்கப்பட்டுள்ளதாக திரு அபூர்வ சந்திரா தெரிவித்தார்.

[]<<<>>>[]

இந்திய ராணுவ அதிகாரி மேஜர் ராதிகா சென் ஐ நா-வின் அமைதிக்கான ராணுவ விருதுக்கு தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளார்.

அமைதிக்கான நடவடிக்கைகளில் அவர் சிறப்பாக செயல்பட்டதாகவும், மகளிர் மற்றும் பெண் குழந்தைகளின் அங்கீகாரம் மற்றும் உரிமைக்காக குரல் கொடுத்ததற்காக அவருக்கு இந்த உயரிய விருது வழங்கப்படுகிறது.

அவருக்கு பாராட்டு தெரிவித்துள்ள ஐ நா பொதுச்செயலாளர் திரு ஆண்டனியோ குட்டாரஸ், தலைமைப் பொறுப்பை ஏற்று சிறப்பாக செயல்படுவதிலும், முன்மாதிரியாக சேவையாற்றுவதிலும் மேஜர் ராதிகா சென் சிறப்பாக செயல்பட்டார் என்று கூறியுள்ளார்.

அவரது சேவை ஐ நா நடவடிக்கைகளுக்கு சிறந்த பங்களிப்பாக திகழ்கிறது என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

இதனிடையே செய்தியாளர்களிடம் பேசிய ஐ நா பொதுச்செயலாளரின் செய்தி தொடர்பாளர் திரு **Stephana Dujarric** இந்த உயரிய விருதை நாளை நடைபெறும் நிகழ்ச்சியில் ஐ நா பொதுச்செயலாளர் வழங்க உள்ளதாகத் தெரிவித்தார்.

மகளிர் மற்றும் பெண் குழந்தைகளை பாலியல் வன்முறையிலிருந்து பாதுகாப்பதற்கான ஐ நா பாதுகாப்பு சபையின் தீர்மானத்தை கொண்டு வருவதற்கு மேஜர் ராதிகா சென் முக்கிய பங்காற்றியவர் என்பது குறிப்பிடத்தக்கது.,

இமாச்சல பிரதேசத்தில் பிறந்த ராதிகாசென், உயிரி தொழில்நுட்ப பொறியாளராக மும்பையில் உள்ள இந்திய தொழில்நுட்ப கழகத்தில் முதுநிலை பட்டம் பெற்றவர்.

**[]<<<>>>[]**

நெதர்லாந்து நாட்டின் புதிய பிரதமராக திரு **Dick scoof** தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளார்.

**[]<<<>>>[]**

நாட்டின் வடகிழக்கு எல்லைப்பகுதியில் ரொஹிங்கியா உள்ளிட்ட பங்ளாதேஷை சேர்ந்தவர்கள் ஊடுறுவுவதற்கு காரணமாக இருந்த முக்கிய குற்றவாளியை தேசிய புலனாய்வு அமைப்பினர் கைது செய்துள்ளனர்.

**[]<<<>>>[]**

ஓமனில் உள்ள இந்திய வம்சாவழியினர் குறித்த தகவல்களை ஆவணப்படுத்தும் திட்டத்தை தேசிய தொல்பொருள் காப்பகமும். அந்நாட்டில் உள்ள இந்திய தூதரகமும் இணைந்து செயல்படுத்தியுள்ளன.

**[]<<<>>>[]**

ஏவரெஸ்ட் சிகரத்தின் உச்சியை ஒரே வாரத்தில் இரண்டு முறை அடைந்தவர் என்ற வரலாற்று சாதனையை சத்தியதிப் குப்தா படைத்துள்ளார்.

**[]<<<>>>[]**

ஹரியானா மாநிலம் சோலிப்பட்டில் ரப்பர் தொழிற்சாலையில் ஏற்பட்ட தீ விபத்தில் 45 தொழிலாளர்கள் தீக்காயமடைந்தனர்.

[]<<<>>>[]

மகாராஷ்டிரா மாநிலம் **Gadchiroli** -யில் நக்ஸலைட் தீவிரவாத அமைப்பைச் சேர்ந்த ஒருவர் மத்திய ரிசர்வ் காவல்படை முன்பு நேற்று சரணடைந்தார்.

[]<<<>>>[]

மகாராஷ்டிரா மாநிலம் பால்கார் ரயில் நிலையத்தில் சரக்கு ரயில் ஒன்றின் ஐந்து பெட்டிகள் தடம்புரண்டதால் ரயில் போக்குவரத்து பாதிக்கப்பட்டது.

[]<<<>>>[]

கள்ளக்குறிச்சி நகரில் முதல் முறையாக சாலையோர வாய்க்கால் ஆக்கிரமிப்புகளை அகற்றும் பணி காவல்துறையினரின் பாதுகாப்புடன் நேற்று தொடங்கியது.

[]<<<>>>[]

மயிலாடுதுறை மாவட்டத்தில் மீன்பிடி தடைக்காலம் முடிந்தபின் கடலுக்குச் மீன்பிடிக்கச் செல்லவுள்ள விசைப்படகுகளை மீன்வளத்துறை அதிகாரிகள் நேற்று ஆய்வு செய்தனர்.

[]<<<>>>[]

உலக தடகள போட்டியின் நீளம் தாண்டுதலில் இந்தியாவின் ஷைலி சிங் வெண்கலப்பதக்கம் வென்றுள்ளார்.

செக்குடியரசின் ஒஸ்டாவா நகரில் நடைபெற்ற இப்போட்டியில் ஷைலி சிங் ஆறு புள்ளி நான்கு இரண்டு மீட்டர் நீளம் தாண்டி இப்பதக்கத்தை வென்றார்.

[]<<<>>>[]

தாய்லாந்து நாட்டின் பேங்காக்கில் நடைபெற்று வரும் உலக ஒலிம்பிக் தகுதிக்கான குத்துச்சண்டை போட்டியில் இந்தியாவின் **Nishant Dev and Sachin Siwach**ஆகியோர் காலிறுதிக்கு முந்தைய சுற்றுக்கு முன்னேறியுள்ளனர்.

நிஷாந்த் 71 கிலோ எடைப்பிரிவில் மங்கோலிய வீரரை தோற்கடித்து காலிறுதிக்கு முந்தைய சுற்றுக்கு தகுதிபெற்றார்.

சுச்சின் 57 கிலோ எடைப்பிரிவில் டென்மார்க வீரரை தோற்கடித்தார்.

**[]<<<>>>[]**

பாரிஸ் ஒலிம்பிக் போட்டிக்கு இந்திய ஜூடோ வீராங்கனை துலிக்கா மான் தகுதி பெற்றுள்ளார்.